நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

சத்தியமங்கலம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திரு.S.வெங்கடேஷ்வரன்

நக.எண்.965/2025/எப்1 **நாள். 21.01.2026**

பொருள்: மனைப்பிரிவு-சத்தியமங்கலம் நகராட்சி- ரங்கசமுத்திரம் கிராமம், டவுன் சர்வே வார்டு எண்-E, பிளாக் எண்-01, நகரளவு எண்-24/1, [பழைய க.ச.எண்-8/1A, 7/2c]-இல் 3.30 1/4 ஏக்கர் (அல்லது) 13371.0 ச.மீ பரப்பளவுள்ள இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்குதல்- தொடர்பாக

பார்வை : 1. திரு.V.C.முருகேசன், த/பெ.சின்னசாமி கவுண்டர், என்பவரது இணையதள விண்ணப்பம் எண்.N5Z5MTBE நாள்.27.02.2025

2. மாவட்ட நகர் ஊரமைப்பு துணைஇயக்குநர் அலுவலகம், ஈரோடு இணையவழி ROC NO. N5Z5MTBE/2025/TCP நாள்.28.03.2025 இன்படி நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய அங்கீரிக்கப்பட்ட சாலை,பூங்கா மற்றும் பொது உபயோக அமைப்பு வரைபடம்.

3. சார்பதிவாளர் அலுவலகம், சத்தியமங்கலம் அவர்களின் தான ஆவண எண் : 2127/2025, நாள்:01.04.2025 மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கான தான ஆவண எண் : 2128/2025, நாள்: 01.04.2025

4. மாவட்ட நகர் ஊரமைப்பு துணைஇயக்குநர் அலுவலகம், ஈரோடு இணையவழி ROC NO. N5Z5MTBE/2025/TCP, நாள்:05.04.2025 இன்படி, தொழில் நுட்ப அனுமதி வரைபடம் ஒப்புதல் மற்றும் SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL No.100/2025, என எண்ணிட்ட அங்கீகாரம் செய்யப்பட்ட வரைபடம்.

5. சத்தியமங்கலம் நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.1159 நாள்.20.01.2026

6. மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.4,69,000/-ம் செலுத்தப்பட்ட விவரம் சலான் எண்.061/CP/25-26/0001986 நாள்.21.01.2026

****

உத்திரவு :-

பார்வை 1- இல் கண்டுள்ள தங்களின் இணையதள விண்ணப்பத்தில் சத்தியமங்கலம் நகராட்சி , ரங்கசமுத்திரம் கிராமம், டவுன் சர்வே வார்டு எண்-E, பிளாக் எண்-01, நகரளவு எண்-24/1, [பழைய க.ச.எண்-8/1A, 7/2c]-இல் 3.30 1/4 ஏக்கர் (அல்லது) 13371.0 ச.மீ பரப்பளவுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி கோரி மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்திற்கு 27.02.2025 அன்று இணையதளம் வாயிலாக விண்ணப்பம் செய்யப்பட்டு ள்ளது.

பார்வை 2 இல் கண்டுள்ள மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், ஈரோடு இணையவழி ஒப்புதலில் கண்டுள்ள அங்கீகாரம் செய்யப்பட்ட சாலை வடிவமைப்பு வரைபடத்தின்படி பார்வை-3 இல் காணும் சார்பதிவாளர் அலுவலகம், சத்தியமங்கலம் அவர்களின் தான ஆவண எண் : 2127/2025, நாள்:01.04.2025 மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கான தான ஆவண எண் : 2128/2025, நாள்: 01.04.2025 இன்படி தான ஆவண நகல்கள் பெறப்பட்டுள்ளது.

(த.பி.பா)

அதன்படி, பார்வை 4 -இல் கண்டுள்ள மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், ஈரோடு இணையவழி ROC NO. N5Z5MTBE/2025/TCP, நாள்:05.04.2025 இன்படி, தொழில் நுட்ப அனுமதி குடியிருப்பு மனைகளாக பிரித்து வரைபடம் ஒப்புதல் மற்றும் SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL No.100/2025,என எண்ணிட்ட அங்கீகாரம் செய்யப்பட்ட வரைபடத்தின்படி, பார்வை 5-இல் கண்டுள்ள இந்நகர்மன்ற தீர்மானத்தின்படி மனைப்பிரிவில் வரும் சாலைகள் ,வடிகால்கள்,சிறுபாலங்கள்,குடிநீர் பகிர்மானக் குழாய்,தெரு விளக்குகள் மற்றும் பொது உபயோக இடங்களை நகராட்சியின் பராமரிப்பில் ஏற்றுகொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பார்வை -6 இல் கண்டுள்ளவாறு மனுதாரர் தொகை செலுத்தி இரசீது நகல் சமர்ப்பித்துள்ளார்.

அதன்படி. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு இவர்களின் இணையவழி உத்திரவில் கண்டுள்ள பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளின்படியும் குடியிருப்பு மனைபிரிவிற்கு அனுமதி அளித்து உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:

- மாவட்ட நகர் ஊரமைப்பு துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ,ஈரோடு அவர்கள் தெரிவித்துள்ள நிபந்தனைகளை மீறக் கூடாது.
- ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு இடத்தில் மாற்றங்கள் செய்யப்பட இருப்பின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
- மேற்கண்ட மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ள நிபந்தனைகள் வரிசை எண்.3 முதல் 9 மற்றும் 13,15 வரை உள்ள நிபந்தனைகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

ஆணையாளர்,

சத்தியமங்கலம் நகராட்சி

21/1/26

இணைப்பு:

மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு இவர்களின் இணையவழி அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் மற்றும் பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள்

பெறுநர்

திரு.V.C.முருகேசன்,
த/பெ.சின்னசாமி கவுண்டர்,
6/1160, சக்தி நகர் 2-வது வீதி,
காளிங்கராயன்பாளையம்,
மேட்டு நாசுவம் பாளையம், ஈரோடு .

நகல்:

1. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு.
2. நகராட்சி பொறியாளர் சொத்து பதிவேட்டில் தான ஆவணம் மூலம் பெறப்பட்ட சாலை ,வடிகால் ,சிறுபாலம் மற்றும் பொது உபபோக இடங்களை பதிவு செய்யவும்,
3. நகரசார் ஆய்வாளர்,சத்தியமங்கலம் நகராட்சி. (தான ஆவணங்கள் மூலம் பெறப்பட்ட சாலை மற்றும் பொது உபயோக இடம் நகராட்சி ஆணையாளர் பெயருக்கு வருவாய் பதிவேட்டில் உட்பிரிவு செய்ய நடவடிக்கை எடுத்து அதன் விவரத்தினை சமர்ப்பிக்கவும்.)